மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி. சி. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் மாசித்திங்கள் 12 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 387/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 133/2018**

Dr. S.R.V. தங்கமணி ...மனுதாரர் /வாதி

**// எதிர்//**

R. முருகராஜன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 22.02.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி பேரில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில்

மனுதாரர்/வாதி தரப்பை நிரூபிக்க கூடிய முக்கியமான ஆவணங்களான மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து சான்றிட்ட நகலும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி மனு செய்து வழக்கிற்காக பெறப்பட்ட ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றதால் முதல் விசாரணையின்போது தாக்கல் செய்யாமல் விடுப்பட்டு போய்விட்டது. மேற்படி ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யப்படாத தவறுதலை மன்னித்து தற்போது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றிக்கொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். இல்லாத பட்சத்தில் மனுதாரர்/வாதிக்கு ஏராள கஷ்ட நஷ்டங்களும், பாதிப்புகளும் ஏற்படக்கூடயதாக உள்ளது. எனவே, மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள உத்தரவிடவேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3. எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

மனு விவரங்களை எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனுவின் சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். மனுதாரர் தரப்பில் பி.டபில்யூ.1 ஆகவிசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் வேண்டுமென்றே மனுதாரர் வழக்கு சம்மந்தமில்லாததும், தேவையில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய கேட்டிருப்பது சரியானதல்ல. 09.02.1996 மற்றும் 01.03.1995 ஆகிய தேதிகளில் ஏற்பட்டதாக கூறப்படும் ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமானது ஆகும். வாதி தனது வழக்குரையில் வாதிக்கும், பிரதிவாதி 30.08.1996 ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லுபடியானதா அந்த கிரய ஆவணம் செல்லாதது என அறிவிக்க கோரியிருக்கும் வாதியின் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்பதாகும். காலாவதியான வழக்கை பல வருடங்கள் காலங்கடத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டதாகும். பலதடவை வழக்கை நடத்த சந்தர்ப்பம்

கொடுத்தும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் 10 ஆண்டுகளுக்க மேலாக இருந்து வரும் நிலையில், வேண்டுமென்ற உரிய நேரத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி பேரில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பை நிரூபிக்க கூடிய முக்கியமான ஆவணங்களான மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து சான்றிட்ட நகலும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி மனு செய்து பெறப்பட்ட ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றதால் முதல் விசாரணையின்போது தாக்கல் செய்யாமல் விடுப்பட்டு போய்விட்டது என்றும், எனவே, ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தற்போது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.**எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் பி.டபில்யூ.1 ஆகவிசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் 09.02.1996 மற்றும் 01.03.1995 ஆகிய தேதிகளில் ஏற்பட்டதாக கூறப்படும் ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமில்லாதது என்றும், வாதி தனது வழக்குரையில் வாதிக்கும், பிரதிவாதி 30.08.1996 ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லுபடியானதா அந்த கிரய ஆவணம் செல்லாதது என அறிவிக்க கோரியிருக்கும் வாதியின் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், காலாவதியான வழக்கை

பல வருடங்கள் காலங்கடந்து பலதடவை வழக்கை நடத்த சந்தர்ப்பம் கொடுத்தும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் நிலையில், வேண்டுமென்று உரிய நேரத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சினை</u>:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி பெயருக்கு மாவட்ட பதிவாளர் கட்டாய பதிவு செய்ய வழங்கிய 04.08.1997 தேதியிட்ட மேல்முறையீட்டு எண். 4/1997-ல் ஏற்பட்ட உத்தரவும் அதனடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு மன்னார்குடி சார்பதிவாளர் செய்து கொடுத்துள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.1619/1997 கிரய சாசனமும் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வாதிக்கு சொந்தமான தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி வேறு 3 ம் நபர்களுக்கு எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது என்பதற்காக பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வா.சா.1-ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக போடப்பட்டிருந்தபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இரு தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், அசல்

வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.1-ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக போடப்பட்டுள்ள நிலையில், கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து வாதி தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதிலும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நம்பகத்தன்மை, செல்லும் தன்மை, தொடர்பு சம்மந்தமாக அசல் வழக்கில் குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு இருப்பதை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டும் நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 24.02.2022) அவையறியப் பகரப்பட்டது.

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>** :-

**இருதரப்பிலும்** : இல்லை

C KALAIVANI Digitally signed by C KALAIVANI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.